திருச்சியில் திராவிடர் எழுச்சி!

Phone No. 4502
விலை அணா ஒன்று

Regd. No. M. 5458
[இலங்கை [illegible] சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (3—1—50) வெளியூர் (4—1—50) [இதழ் 133

மாநாட்டுப் பந்தலின் உள்ளும் புறமும் உணர்ச்சி மிக்கப் பெருங்கூட்டம்!

ஆட்சியாளரின் கண்மூடித்தனமான அடக்குமுறைக்குக் கண்டனம்!

மாவட்ட மாநாட்டுப் பிற்பகல் நிகழ்ச்சி

1—1—50 பிற்பகலில் மாநாடு மீண்டும் கூடிற்று. அதுபோது முக்கியமிக்க தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

அடுத்து, நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் தனது விறுவிறுப்பான சொற்பொழிவின் மூலம் வெள்ளம்போல் கூடியிருந்த மக்களுக்கு உணர்ச்சியூட்டினர்.

கடைசியாக பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விவரித்து, மேற்கொண்டு செய்யவேண்டிய கடமைகள் பற்றியும், அரசியலாரின் கண்மூடித்தனமான அடக்குமுறைகளைக் கண்டித்தும், எச்சரித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். அண்ணாதுரை அவர்கள் பேசும்போது மாநாட்டுக் கொட்டகையின் உள்ளும் புறமும் கூட்டம் சமாளிக்க முடியாததாயிருந்தது.

பகல் உணவுக்குப்பின் மாநாடு மீண்டும் 3-மணிக்கு மாநாட்டுத் தலைவர் கோவில்பட்டி வள்ளிமுத்து தலைமையில் துவக்கப்பட்டது.

தேசியர் ராஜாமடம் சாவித்திரி அம்மையார் இயக்கப் பாடல்கள் பாடினர்.

வீரதைப் பெருந்தகையார் பெ சி சிதம்பரனார், அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, மவீரர் ஆசிரியர் வேலாயுதம், ஜல கண்டபுரம் கார்த்திகனி ஆகியோரின் மறைவுக்கு வருந்தியும், அனுதாபம் தெரிவித்தும் தலைவரால் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, எல்லோரும் இரண்டு நிமிடம் மௌனமாகயிருந்து மறைந்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

தீர்மானங்கள்

பின்னர் சீனா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் குடியரசு அமைந்ததைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தும், புதிய அரசியல் திட்டத்தின் போக்கைக் கண்டித்தும், திருச்சி வானொலியில் இந்தியைமறைமுகமாகப்பரப்புதல் ஜெய் இந்த், வந்தே மாதரம் என்று கூறுவதற்குப் பதிலாக, வணக்கம் என்றே கூறவேண்டும் என்று சர்க்காருக்கும், திருச்சி வானொலி நிலையத்தாருக்கும் வற்புறுத்தியும், இந்து மதச் சட்டத் திருத்த மசோதாவுக்குஆதரவு அளித்தும், கட்டாய இந்தியை எதிர்த்தும், கலைத்துறை மூலம் தி. மு. க. கொள்கையினைப் பரப்ப வேண்டியகடமை பற்றியும், பேச்சுரிமை, எழுத்துரிமை மற்றும் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் அடக்குமுறைகளைக் கண்டித்தும், திராவிடநாடு தனி அரசாகவேண்டுமென்பதை வலியுறுத்தியும் ஆக மற்றும் பல தீர்மானங்களை கொண்டு வரப்பட்டு நிறைவேறின.

மேற்படி தீர்மானங்களை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் தோழர்கள், கே. [illegible] நீலமேகம், டி. சண்முகம், திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம், எஸ் அப்பாவு, இரா. சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி, டி. கே. சீனிவாசன், உ. எம் பார்த்தசாரதி, இரா. இளம்வழுதி கே ஏ. மதியழகன் அரங்கண்ணல், மா இளஞ்செழியன், எம். எஸ். ராமசாமி, சி. பி. சிற்றரசு, முல்லைக்கொம்பை வடிவேலு ராமாமிர்தம் அம்மையார், பொருசெல்வி அம்மையார், ஏ கே வேலன். என் எஸ். இளங்கோ, குடந்தை பரசுங்குசம், மு. கருணாநிதி, காஞ்சி கல்யாணசுந்தரம் இரா. நெடுஞ்செழியன், ஈ. சங்கரய்யா, காஞ்சி மணிமொழியார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எ. சித்தையன், உறையூர் அழகு முத்து, குடந்தை எஸ். கே. சாமி, அழகரடி முத்து ஆகிய மற்றும் பல தோழர்கள் பேசினர். (தீர்மான விவரங்கள் பின்னால் வரும்)

அடுத்தபடியாக, நடிப்புப் புலவர்; கே. ஆர் ராமசாமி அவர்கள், விறுவிறுப்பாக சொற்பொழிவின் மூலம்வெள்ளம் போல் கூடியிருந்த மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டினர்.

கடைசியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மாநாட்டிலநிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விவரித்தும், மேலால் செய்ய வேண்டிய கடமைகளையும், அரசியலாரின் கண்மூடித்தனமான அடக்குமுறையை எச்சரித்தும், நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் மாநாடு இரவு 8-மணிககு முடிவுற்றது.

இரவு 9-30 மணிக்கு; நடிப்புப்புலவர் கே. ஆர். ஆர், சி. என். அண்ணாதுரை, ஈ வி. கே. சம்பத் மற்றும் இயக்கத் தோழர்கள்நடித்த சந்திர

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

திக்கெட்டும் பரவி தீரப்பணியாற்றுகிறது திராவிட முன்னேற்றக் கழகம்

உள்ளத்தூய்மையும்கொள்கைஉறுதியுமே புதுக்கழகம்கண்டமைக்குக்காரணங்கள்

பலப் பரீட்சை வேண்டாம்; பயனுள்ள பணியாற்றுவோம் வாரீர்!

திருச்சி மாநாட்டில் தோழர் என். சங்கரன் வரவேற்புரை

★

1950 ஜனவரி 1 ஞாயிறு அன்று நடைபெற்ற திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் என். சங்கரன் அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை:

★

அண்ணா அவர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! தாய்மார்களே! தோழர்களே!

இன்றுநடைபெறும் திருச்சி மாவட்ட முதல் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்கவும், பணியாற்றவும் முன்வந்துள்ள உங்கள் எல்லோரையும், வரவேற்புக் கழகத் தலைவன் என்ற முறையில், வரவேற்கும் வாய்ப்பைப் பெற்றதற்காக நானமிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மாநாட்டுக்குழுவினர் சார்பில், உங்களனைவருக்கும் நல்வரவு கூறுகிறேன்.

நமது பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும், மாநாட்டுத் தலைவர் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்களும், மாநாட்டுத் திறப்பாளர் தோழர் பி. பழனிசாமி அவர்களும், மற்றும் நமது இயக்க அறிஞர்களும், சொற்பொழிவாளர்களும், தொண்டர்களும், தாய்மார்களும் தவறாது கலந்துகொண்டமைக்கு நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

திக்கெட்டும் தழைக்கிறது தி. மு. கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெறும் முதல் மாநாடானதைபால் இம்மாநாடு மிகவும் முக்கியத்துவமுடையதாகும். கடந்த நான்கு மாத காலமாக நாமாற்றிவந்த கழகப்பணியின் காரணமாகவே, நாம் இன்று இங்குகூடியுள்ளோம். தமிழ்நாடு முழுவதும் நாடு நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் நமது முன்னேற்றக் கழகம் மலர்ந்து மணம்வீசி வருகிறது இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே தமிழ்நாட்டில் மட்டுமின்றி, திராவிடநாட்டின் மற்ற மண்டலங்களாகிய ஆந்திரத்திலும், கேரளத்திலும், கன்னடத்திலும், ஈழத்திலும் [illegible] கிளைக் கழகங்கள் தோன்றி உள்ளனவென்றால், நமதியக்கம் உயிர்த் தன்மை கொண்டு மக்களால் வரவேற்கப்படும் தன்மையது என்பதை எடுத்துக் காட்ட வேறென்ன வேண்டும்? "சென்றவிடமெல்லாம் சிறப்பு" அறிஞர்க்கு என்பர். அறிவினை அடிப்படையாகக் கொண்ட நமது முன்னேற்றக் கழகத்திற்கும் பரவுமிடமெல்லாம்பாராட்டுகள் குவிகின்றன திக்கெட்டும் முழக்கமிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் வலம் வருகிறது. இந்நிலையில் நமது முன்னேற்றக் கழகத்தின், பெரு வளர்ச்சிக்கு வழிகோலவும், நமது இலட்சியபுரிக்கு திட்டங்கள் தீட்டிக்கொள்ளவும், அந்தந்த மாவட்டங்களிலேயும் அமைப்புகளை வலுப்படுத்தி, தொண்டர்களைத் திரட்ட ஒரு அண்டு கோலாகத் திகழவே இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

அன்றும் இன்றும்

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ நாற்பது கிளைக்கழகங்கள் தோன்றியுள்ளன அவற்றின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளுகின்றனர். மேலும், நூற்றுக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் திருச்சி மாவட்டத்திலே தோன்ற வேண்டும் என்பதே எமது விருப்பம். அதற்கான பணியை நமது அருமைத் தோழர்கள் செய்த வண்ணம் உள்ளனர். இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினராகக்கூடியுள்ள நாம், சிலகாலம் முன்புவரை திராவிட கழகத்தில் பணியாற்றி வந்துள்ளோம். திராவிடர் கழகமே அதற்குமுன், சுயமரியாதை இயக்கமாகவும், நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் கட்சி) யாகவும் பணியாற்றி வந்த போதும், நாம் அங்கே

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 3—1—50 செவ்வாய்க்கிழமை

திருச்சி மாநாடு

திருச்சி, மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு-சென்ற ஞாயிறன்று காலை 9-மணிக்கு, திருச்சி முருகன் டாக்கீஸ் பக்கத்திலமைந்த வேலாயுதம் நினைவுப் பந்தலில், சீரும் சிறப்புமாக நடைபெற்றது, மாபெரும் பந்தலெனினும் பந்தல் கொள்ளாத அளவுக்கு மக்கள்திரண்டனர், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பேராதரவுகாட்டினர்; பெருந்திரளாகக்கூடியது மூலமாக மாவட்ட மாநாடு தான் எனினும் மாகாண மாநாடே என்றெண்ணும்படி திகழ்ந்தது மாநாடு. தூத்துக்குடியிலிருந்து சென்னை வரை உள்ள முக்கியத்தோழர்களெல்லாம், தொண்டாற்றும் தீரர்களெல்லாம் கலந்து கொண்டனர். திருச்சியே களிப்புக்கடலில் மூழ்கியது என்றால், மிகையாகாது,

மாநாட்டு முகப்பில் கழகக் கொடி உயர்த்தப்பட்ட பின்பு மாநாட்டுத் தலைவர்களும் மற்றும் நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், நடிப்புப் புலவர் கே. ஆர் ராமசாமி ஆகியோரும், மேடையை நோக்கிச் சென்றபோது, கூடியிருந்த பெருமக்கள் எழுப்பிய வாழ்த்தொலி அவர்களது உற்சாகத்தையும், இயக்கத்திலே கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளியிடுவதாக அமைந்திருந்தது.

மாநாட்டின் தொடக்கத்தில் சிறுவன் அபேதானந்தம்-'திராவிடப் பண்' இசைத்தார். இன்புற்றனர் மாநாட்டினர்,

அடுத்து—நகைச்சுவை அரசு-என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் தமது குழுவினருடன், இயக்கப் பாடல்களை இசைத்த போது, மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

வரவேற்புக் கழகத் தலைவரின் வரவேற்புரை நமதுகழகம் துவக்கப்பட்டபின், எவ்வளவு விரைவிலே நாம் வளர்ச்சியடைந்து வருகிறோம் என்பதை விளக்கிக் கூறிற்று திறப்பாளரின் சொற்பொழிவு, நமது கழகத்தைத் தோற்றுவித்த பின்—நம்முடைய பொறுப்பு வளர்ந்துள்ளதை எடுத்துக்காட்டி, மேலும் பணியாற்றத் தூண்டு கோலாய் விளங்கிற்று. மாநாட்டுத் தலைவரின் ஆணித்தரமான விரிவுரை:—

நமக்குக்கொள்கையேமுக்கியமன்றி, ஆளல்ல என்பதையும், சுயநல, நோக்கமோ, துரோகச் சிந்தையோ, கொண்டவர்கள், நம்மிலே எவரும் இல்லையென்பதையும் விளக்கி, இன்றைய அரசியலாரின் பாசிசப்போக்கையும், எதேச்சாதிகார வெறியையும்-மாற்றவும்; வைதீகர்களின் பழமைப் பித்தத்தைத் தெளியச் செய்யவும், தளராது பணிபுரிய,கடமையைச்செய்து முடிப்புற, தோழர்கள், சிலுவர் முன் வரவேண்டுமெனக்கேட்டுக்கொள்ளும் சங்கநாதமாகத் திகழ்ந்தது.

இடைவேளைக் குப்பின் பகல் மூன்று மணிக்கு மாநாடு மறுபடியும் தொடங்கிற்று, மக்கள் எள்விழ இடமில்லாமல் நெருங்கியும் நிறைந்துமிருந்தனர். முதல்நாள், தீர்மான ஆய்வுக்குழுவினரால் தீர்மானிக்கப்படி, சுமார் 20 முக்கிய தீர்மானங்கள், நமதியக்கச்சொற்பொழிவாளர்களாலும், மற்றத் தோழர்களாலும் கொண்டு வரப்பட்டு, மாநாட்டினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. நமது சீர்திருத்த சுயமரியாதை இயக்கப்பணிகளில், பங்கெடுத்துக்கொண்டும், ஆதரவு அளித்தும் உதவி அண்மையில் மறைந்த பெரியோர்களான, வஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, பொருந்தகை பெ. சி. சிதம்பரம், உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் கலகண்டபுரம் ப. வர்த்தநாரி ஆகியோருடைய குடும்பத்தாருக்கு—மாநாடு தனது ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது.

அடுத்து—நம் கழகத்தின் முக்கிய கொள்கைகளை ஒட்டி, உலகப் போக்கின் தன்மையையும் ஆராய்ந்து, நம் சமூக நிலைமையிலிருந்து— நம் நாட்டின் ஆட்சியினர் நடவடிக்கை வரையில்-நமது கருத்தை விளக்கும் முறையில்தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு நிறை வேற்றப் பட்டுள்ளன.

தீர்மானங்களைக் குறித்துப் பேசிய தோழர்களெல்லாம், தக்க ஆதாரங்களோடு, விளக்கமும் தெளிவும் பெறும்படிப் பேசியதைக் கேட்டவரும், நமதியக்கத்தின் கொள்கைகளும்திட்டங்களும், எந்த அளவுத் தெளிவோடு—நாட்டிலேபரப்பப்பட்டுவருகின்றன சொற்பொழிவாளர்கள் எவ்வளவுதிறம்பெற்றுவிளங்குகிறார்கள் என்பதை எண்ணிப் பூரிப்படையாமல் இருக்கமுடியாது. சாதாரணப் பிரச்னையிலிருந்து, சிக்கல் நிறைந்த, மற்ற அரசியல் கட்சியினருக்குப் புதிதாக இருக்கக் கூடிய பிரச்னை வரையில் சமூகவாழ்க்கைத்துறையில் இருந்து, அகில உலக அமைதியைக் காக்கும் அரசியல் திட்டம் வரையில், நம்முடைய தோழர்கள் தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றிய முதல் மாநாடு இதுவேயாகும்,

திராவிட முன்னேற்றக்கழகத்தின் முதல் மாநாடு—திராவிடர் கழக மாநாட்டிலிருந்து-நிச்சயமாகப் பல துறையிலும் முன்னேற்றத்திற்கான அடையாளங்களோடே விளங்குகிறது. தீர்மானங்கள் நிறைவேறிய போது, மக்கள் கவனமாகவும், கவலையோடும் கவனித்துவந்ததும் இடையிலே, எவருமே அடாது ஆசையாது அமர்ந்திருந்ததும், அவர்களுடைய பொறுப்புணர்ச்சியைக் காட்டுவதாகும்.

தீர்மானங்கள் நிறைவேறிய தன்-நடிப்புப்புலவர், கே. ஆர். இராமசாமி அவர்கள், கலைஞர்களும்-இத்தகைய இயக்கத்தில் கலந்துகொண்டு நிரந்தரமான-பயன் விளைக்கும் சீர்திருத்தப் பணிசெய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுகொண்டுநிகழ்த்திய சொற்பொழிவு அனைவரையும் புது நம்பிக்கை கொள்ளச்செய்தது.

பொதுவாக-தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே இடம்பெறத் தக்க விதத்தில்-திராவிடச் சமுதாயத்திலேயே-ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கி வைக்கும் வகையில்-திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை, இலட்சியங்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் தன்மையில், அமுத கண்ணும், தேம்பிய உள்ளமும் கொண்டு தேங்கிய தோழர்களை யெல்லாம், புது முறுக்கோடும்-புத்துணர்ச்சியோடும் இலட்சியப் பாதையில் நடக்கச் செய்யும் முறையில் தி. மு. கழகத்தின் இம் முதல் மாநாடு அமைந்தது பாராட்டத்தக்கது.

இவ்வளவு சிறப்புக்கும் காரணமாகத் தொண்டாற்றிய மாநாட்டு வரவேற்புக் கழகத்தினருக்கும் தொண்டர் படையினருக்கும் கடமையை நிறைவேற்றியதற்காக நம்முடைய பாராட்டுதல் உரித்தாகும். மாநாடு வெற்றி பெறக் காரணமாக இருந்த எல்லோருமே-திராவிட மக்கள் அனைவரின் மகிழ்ச்சிக்கும் - பாராட்டுக்கும் உரியவராவர்-என்பதைத் தெரிவிக்க களிப்படைகின்றோம்!

வாழ்க—திராவிடம்!
வளர்க தி. மு. கழகம்!

அறிவுக் கதிர்

நடவுசெய்த தோழர் கூலி
நாலணாவ ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்.

— பாரதிதாசன்

ஆட்சியாளரின் திருநோக்கு!

"பகுத்தறிவுப் பண்ணையில் வெளியான 'கோட்சேக் கூட்டம்'" என்ற நூலில் ஆட்சேபகரமான கருத்துகள் இருப்பதாகக் கருதி, எழுதி வெளியிட்ட தோழர் இளஞ்செழியனை விசாரிக்க, திருச்சி ஜில்லா கலெக்டர் ஆணையிட்டப்படி 29—12—49 தில் குளித்தலை தாலுகா சப்-மாஜிஸ்டிரேட் டி. எம் நாராயணனுண்ணி மாரார் விசாரித்தார்.

மாசிஸ்னாவில் இராக்கின் தூதராக ... இளமிச்சம்பட்டி குடிவிருக்கிறார்.

தி. மு. க. பொதுக் குழுக் கூட்டத்தில் காரியக் கமிட்டி நிறுவனம்

திருச்சி ஜன. 2—

31—12—49 இரவு 9 மணிக்கு திருச்சி கருணாநிதி பார்க்கில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் (அவாம் நேற்று வெளியிட்டிருக்கிறது) காரியக் கமிட்டி பற்றிக் கீழ்க் கண்ட முடிவுகள் செய்யப்பட்டனர்.

காரியக் கமிட்டி

பொதுச் செயலாளர் :—சி. என் அண்ணாத்துரை; பிரசாரக்குழுச் செயலாளர் :—இரா. நெடுஞ்செழியன்; அமைப்புக்குழுச் செயலாளர்:—என். வி. நடராசன்; நிதிக்குழுச் செயலாளர் :—காஞ்சி. மணிமொழியார்; சட்டதிட்டக்குழுச் செயலாளர் : - கே ஏ. மதியழகன்

உறுப்பினர்கள்

1. சத்தியவாணிமுத்து (சென்னை)
2. கே. எம். கண்ணபிரான் ,,
3. டி. எம். பார்த்தசாரதி ,,
4. சி. பஞ்சாட்சரம் (மதுராந்தகம்)
5. எம் எஸ். எம். மொய்தீன் (காஞ்சீபுரம்)
6. இரா சாம்பசிவம் (குறிஞ்சிப்பாடி)
7. குமார கணிகாசலம் (கள்ளக்குறிச்சி)
8. சி. பி. சிற்றரசு (வேலூர்)
9. முல்லைக்கோம்பை எம். பி. வடிவேலு
10. பேளுக்குறிச்சி ஜி பி. சோமசுந்தரம்
11. சேலம் ஏ. சித்தையன்
12. ஈ வெ. கி. சம்பத்
13. பெத்தாம்பாளையம் பழனிச்சாமி
14. பட்டுக்கோட்டை செளரிராசன்
15. குடந்தை கே கே. நீலமேகம்
16. அம்பில் தருமலிங்கம்
17. பொன்மலை பராங்குசம்
18. அழகாடி முத்து
19. நிலக்கோட்டை காத்தான்
20. ஏ. வி பி ஆசைத்தம்பி (விருதுநகர்)
21. அருப்புக்கோட்டை சண்முகசுந்தரம்
22. ஈ வே. அ வள்ளிமுத்து (கோவில்பட்டி)
23. தூத்துக்குடி எம். எஸ். சிவசாமி
24. வி கே ஜான் (நாஞ்சில்நாடு)
25. பி எஸ். அப்பாதுரை (பங்களூர்)

பின்னர், பொதுக்குழுவில் கீழ்க் கண்ட மூன்று தீர்மானங்களும் நிறைவேறின.

1. விருதைப் பொருந்தகை பெ. சி. சிதம்பரனாரவர்களின் அகால மறைவுக்கு இக் குழு வருந்துவதோடு, அன்னாரின்குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2 நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்கெனவே கூலி விரித்தாடி வருகையில் எம் எஸ் எம், எஸ் ஐ ஆர்; நெசவாலைகள் இன்னும் பிற முக்கிய தொழிற்சாலைகளில் ஆள் குறைப்புத் திட்டம் அமுல் நடத்தப் பெறுவதை இம் மாநாடு கண்டிப்பதோடு, அரசியலார் தக்க நடவடிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது.

3. 1950-ம் ஆண்டுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ளும் கடைசி நாள் 1950, மார்ச் 31-ந் தேதி யாகுமென்று கமிட்டி தீர்மானிப்பதுடன், அதற்குள்ளாக எல்லா மாவட்ட செயலாளர்களும் அமைப்பாளர்களும் உறுப்பினர்களைச் சேர்த்து, ரசீதையும் தொகையையும் தலைமை நிலையத்துக்கு அனுப்பிவைக்கக் கோருகிறது.

திருச்சியில் திராவிடர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'மாகன்' நாடகம் நடைபெற்றது.

பிற்பகல் நிகழ்ச்சியின் முதலில் அண்ணாத்துரை அவர்கள் பேசும்போது, மாநாட்டுக் கொட்டகையிலும் இன்றி தெருக்களிலெல்லாம் மக்கள் கூட்டம் சமாளிக்கமுடியாதிருந்தது. துவக்க முதல் முடிவு வரை மாநாடு உணர்ச்சி மிகுந்ததாயும், மக்களிடையே புதியதோர் உணர்ச்சி மேலிட்டதாயும் இருந்தது.

மாநாட்டுக்கு முதல் நாள் இரவு பொதுக்குழுவின் கூட்டம் நடைபெற்றதால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எல்லா இயக்கக் கழக நிர்வாகிகள், பேச்சாளர்கள் அனைவரும் வந்திருந்து, மாநாட்டிலும் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.

சுருங்கக் கூறவேண்டுமானால், மாகாணமாநாடு என்றே கூறலாம் மாநாட்டின் வரவேற்பு உறுப்பினர்களும் தொண்டர் படைத்தலைவர் அம்பில் தர்மலிங்கம், விளம்பர அதிகாரி வானமாமலை, செயலாளர்கள் பராங்குசம், மணி, வரவேற்புத் தலைவர் எஸ். சங்கரன் ஆகியோரும் இம் மாநாட்டில் வெற்றிகாண உழைத்துக் கொண்ட முயற்சியும் அக்கரையும் பாராட்டத் தக்கதாகும்.

குறிப்பாக மாநாட்டின் பொருளாளர் தோழர் என். சம்பு. உணவு விஷயத்தில் மிக்க கவனம் செலுத்தி, ஒரு குறையுமின்றி தொண்டாற்றினார் பிறவிவரங்கள் அடுத்தவாரம்

உப்பு முதலாளிகள்மீது வழக்கு

சாத்தான்குடி, ஜன. 2—

சாத்தான்குடி உப்புத் தொழிலாளர்களுக்கும் உப்பு முதலாளிகளுக்கும், அரசாங்க அதிகாரிகள் முன்னிலையில் 1949-ம் வருடத்திற்கு கூலி நிர்ணய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இவ்வொப்பந்தப்படி உப்பு முதலாளிகள் தொழிலாளர்களுக்கு கூலிகொடுக்காததால் கோவில் ... பிரமுகர் ... மன்றத் தலைவர் தோழர் ..., வி. என். சுந்தரவேல், என். கே ஆர் பெரியண்ணன் ... ஆகிய இருவரும் ... கோர்ட்டில் வழக்கு தொடுத்திருக்கின்றனர். ... தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் கே. வி. கே. சாமி ..., இவ்வூர் ... தோழர் எம். ஏ. பெருமாள் ... அவர்களும் ஆஜராகின்றனர். க. கி

இராக் ரீஜெண்ட் பாகிஸ்தான் வருகை

பாக்தாத், ஜன. 2—

இராக் ரீஜெண்ட் அப்துல் இல்லா பாகிஸ்தானுக்கு ... விஜயம் செய்ய அதன் அழைப்பை ஏற்றுக் கொண்டு விட்டார். ... தேதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

அடக்குமுறை ஆட்சிக்கு அடிகோலப் படுகிறது!

அல்லல் அகற்ற அனைவரும் திரண்டு வாரீர்!

நல்லோர் உழைப்பை யேற்று நாடு நலம்பெறட்டும்

திருச்சி மாநாட்டுத் தலைமையுரை

(நேற்றையத் தொடர்ச்சி)

நாட்டின் நிர்வாகம் நசித்துக் கொண்டே வருகிறது. எதற்கும் தடை! எல்லாம் [illegible] ஆள் தூக்கி அவசரச்சட்டம் நிர்வாகத்தில் அமர்ந்திருக்கும் தேசியத் தோழர்கள் எந்த உரிமைக்காக ஆட்சிபீடம் ஏறினரோ, எவைகளை மக்களிடம் எடுத்துச்சொல்லி 'திரண்டு வாரீர்' திருவாக்கினை அளிக்க'' என இயம்பினரோ அந்த உரிமை இன்று நிறைவேற்றப்படவில்லை. மாறாக மறுக்கப்[illegible]கிறது. மந்திரிகள் [illegible]வனி, காங்கிரஸ் பிரசாரத்துக்கு உபயோகப்படுத்தப்படுகிறதே தவிர, மக்களின் மனக்கவலையைப் போக்க அல்ல! கல்விச்சாலைகள், போக்குவரத்திற்கான பாதைகள், பாலங்கள் ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்குச் செலவழிக்க வேண்டிய பணம் ஆட்சியாளரது அனுவசியப் போக்கால் வீணாக்கப்படுகிறது. சுருக்கச்சொன்னால் இன்றைய இந்தியா சியாங் காலத்து சைனுவாகவே இருக்கிறது.

உழைப்புக்கேற்ற ஊதியமில்லை!

பொருளாதார பிரச்சினையோ. மிகவும் சிக்கலாக உள்ளது எதற்கும் இல்லையென்ற பல்லவி மகத்துவம் பெற்ற மாகாண சர்க்கார் ஒவ்வொரு காரியத்திற்கும் சர்க்காரிடம் மண்டியிடவேண்டிய நிர்ப்பந்தத்திலேயே இருக்கிறது மத்தியசர்க்காரோ தனது பிடியை பலப்படுத்திக் கொள்வதிலும், அதிகாரத்தை வளர்த்துக் கொள்வதிலுமே கவனமாக இருக்கிறது.

புதிதாகவருகின்ற அரசியல் சட்டமோ, மத்தியசர்க்காரை ஒரு சர்வாதிகாரி பீடமாகவே மாற்றி அமைக்கிறது. மாகாண உணர்ச்சி வளர்கிறது, மொழிவாரி மாகாண பிரிவினை வேண்டுகோள் வலுத்து வருகிறது ஆனால் மத்திய சர்க்கார் இந்த உணர்ச்சிகள் வளராதபடி தடுக்கும் எண்ணத்தோடு மொழி, கலாசார இன உணர்ச்சிகளின் வளர்ச்சிக்கு இடந்தராமல், கழுத்திலே சட்டமென்ற சங்கிலி கொண்டு இறுக்கிப் பிணைக்கிறது. இயல்பாக வளரும் உரிமை வேட்கையை ஆளும வர்க்கம அடக்கியாள இட்டமிடுகிறது. சட்டம் அதற்குத் துணையாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 26-ல் புதுச்சட்டம் அமுலுக்கு வருகிறது. இந்தியத் துணைக்கண்டம் அன்றுமுதல் குடியரசு ஆகிறதாம். குடிகளுக்கே வாழ்க்கை பெரும் பாரமாகிவிட்டது. அரசுக்கே குடிமக்கள் வேம்பாகி விட்டார்கள். குடிகட்கோ அரசு துயரக் காட்சியாகி விட்டது இந்நிலையில்குடியரசுதோன்றுகிறது. கொண்டாட்டம் நடைபெறப் போகிறது. நம் நாட்டு மக்களோ பொருளாதாரத் துறையில் வீழ்ச்சியுற்று வறியவராய், ஏழைகளாய் வதைகின்றனர் வடநாட்டவரோ தொழில் துறையில் ஆலை மன்னராய், பெரும் பெரும் வணிகராய் வளர்கிறார்கள். தென்னாட்டவரோ குடிசைத் தொழிலில் ஈடுபட்டும், விவசாயம் நடத்தியும் பாடுபட்டும் பயன் காணாது தவிக்கின்றனர். நமது உழைப்போ அதிகம்; இலாபம் இல்லை. வடநாட்டார் உழைப்போ குறைவு: இலாபம் ஏராளம் அவர்கள் இலாபம் பெறுவதற்குத் தடை ஏற்படாதபடி பாதுகாப்பளிக்க மத்திய சர்க்கார் ஆட்சிப் பீடம் அவர்கள் ஆதிக்கத்தில் இருக்கிறது.

கழகம் மாற்றமே தவிர, கருத்து மாற்றமில்லை!

ஒரே நாடு என்று எண்ணிக் கூறுபவர்கள்கூட பல நேரத்தில் வேதனை அடையும்படி வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகிறது. அவர்கள் தயாரிக்கும் பொருள்களை எல்லாம் அனுப்பி வைத்து விற்றுஇலாபமடைய தென்னாடே மார்க்கெட்டாக இருக்கிறது. நமது பொருள் வடநாட்டிலே விற்காது;—தேவைப்படவில்லை—அனுப்பும் அளவுக்கு தொழில் வசதி நமக்கு இல்லை. அவர்களுக்கு வசதி இருக்கிறது நம்மைவறிய வர்களாக்குபவர்கு அத்துடன் அவர்களுக்கு உதவியாக அமெரிக்க முதலாளிகள் பெருமளவில் போட்டுத் தொழில் நடத்த [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] சுரண்டல் [illegible] ஜனநாயகத்தின் [illegible] [illegible] நடக்கும்; திராவிடம் சுரண்டப்படும்.

இதுவரை சேரழிவுபட்டு வந்துள்ள நமது திராவிட நாடு. இனியேனும் நல்வாழ்வு பெற வேண்டும் என்றே நாம் [illegible] [illegible]. அதற்காகவே சுயமரியாதை உணர்ச்சி பெற்று சுதந்திர வாழ்வுக்கு வழிதேட நாம் இதுவரை பணியாற்றி வந்துள்ளோம் கழகத்தின் பெயர் மாறியுள்ள போதிலும், நமது உள்ளத்திலே கொண்ட கருத்திலே மாற்றம் ஏதுவுமில்லை.

பணி பல வழிகளிலும் பரவவேண்டும்

மேலும் இன்றைய அரசியல் வட்டார நிகழ்ச்சிகளைக் கவனிப்பவர்கள் நமது பணிக்கு ஏற்பட்டுள்ள பெரியதொரு ஆபத்தை எதிர்பார்க்காமல் இருக்க முடியாது. வடநாட்டில் உத்தமர் காந்தியாரைச் சுட்டு வீழ்த்திய கொடியவன் கோட்சேயின் கூட்டம் கும்பலாகத் தோடு அரசியலில் மரசு கொட்டுகிறது இந்துமகா சபை அடுத்த தேர்தலில் காங்கிரசையே முறியடித்து. அகண்ட இந்துஸ்தானத்தை தேடப்போகிறது. ஒருவேளை காங்கிரசின் இன்றைய போக்கின் காரணமாக இந்துமகா சபைக்கே தேர்தலில் வெற்றி கிடைக்குமானல் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்துமகா சபையினர் அளவந்தார்களானல் என்ன பொருள்? தென்னாட்டில் நடவாது என்றாலும், மத்திய சர்க்காரில் அவர்களது ஆட்சி என்றால் என்ன விளைவு ஏற்படும்? வர்ணாசிரமம் மகுடம் சூடுகிறது; ஞானம் சிம்மாசனம் ஏறுகிறது: வைதீகம் வாளேந்துகிறது; பார்ப்பனீயம் பழைய உருவினிலே பவனி வருகிறது கொட்டு முழக்கோடு என்று தானே பொருள். பகுத்தறிவுப் பணி பாழாக்கப்பட்டு, தன்மானம் சிதைக்கப்படுமே. திராவிடம் அடையாளம்தெரியாது அழிக்கப்பட ஆரியம் வழி தேடுமே என்ற கவலை தானே ஏற்படுகிறது. இந்நிலையைத் தடுக்க நமது பணி விறு விறுப்புடன் பலப்பல வழிகளிலும் மக்கள் மனத்திலே, உறுதி தோன்றச் செய்யும் அளவுக்குநடைபெறுக வேண்டும்.

மக்கள் பயன் பெறவே தி. மு. க. கண்டோம்

இத்தகைய அரும் பணியை முன் நின்று நடத்தவேண்டிய நம் பெரியார், பணத்திற்கு ஏற்பாடு என்று கூறி, பணத்திற்கு வழிதேடிச் சென்றபின் நாம் வேறென்ன செய்ய முடியும்? என் போன்றவர் பெரியாருக்காகவே பாடுபட்டோம் என்பது உண்மைதானென்றாலும், பெரியாரும், சொன்னபடியும் [illegible] [illegible] பெரியாரும் வேறொரு பெண்ணினை நம் [illegible] தம்மை அவரிடம் ஒப்படைத்து விட்டதாக கூறியபிறகு, எப்படி அவரையே நம்பி நாட்டுக்கு ஏற்படும் நாசத்தை பொறுத்து கொள்ள முடியும்?

அவரோடு, நானே, நண்பர் சிலரோ இருந்தால் மட்டும் என்ன செய்ய முடியும் இந்நிலையில்? நாடெங்கும் நல்லறிவு ஏற்படுத்திவரும் எழுத்தாளர்களின் போற்றுதலுக்கு ஆளான அறிஞர் அண்ணாத்துரை அவர்களை அவர்களது அறிவாற்றலை நாம், நம் நாட்டின் நலன் கருதி இழக்க முடியுமா? இயக்கத்தின் நலன் கருதுவோர் பேச்சாலும், எழுத்தாலும் தொண்டாற்றும்தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் க. அன்பழகன் ஆகியோரைத் தான் இழக்க முடியுமா? மாணவர்மணி மதியழகனை, இளம் வீரன், ஈ. வி. கே. சம்பத்தை, மாணவத்தோழர்கள், இளம்வழுதி, இளஞ்செழியன் ஆகியோரை, வாலிபத்தோழர்கள், ஆ. கோ. பசுபதி, ஆசைத்தம்பி, மு. கருணாநிதி. டி. கே. சீனிவாசன் ஆகியோரை, இயக்கத்தின் பழம் பெரும்பேச்சாளர்களான தோழர்கள் சி. ப. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம், என். ஜீவரத்தினம், ஆகியோரை, செயலாற்றும் திறம் படைத்த தோழர்கள் எஸ். வீ. லிங்கம். என்.வி நடராசன் மணிமொழியார், பராங்குசம், என். சாம்பு, மதுரை முத்து ஆகியோரைத்தான் இழந்துவிடமுடியுமா? இவர்களெல்லாம் இல்லாமல், இந்தத் தோழர்களைப்போன்ற நான் குறிப்பிடத்தவறிய நூற்றுக்கணக்கான தோழர்கள் அல்லும் பகலும் உழைக்காதிருந்திருந்தால் இல்லாமல் இந்த இயக்கம் எப்படி வளர்ந்தது? எப்படி இவர்களது உழைப்பை, பயன் கருதாப் பணியை தன்னலமற்ற தொண்டை நாட்டு மக்கள் அடைந்து பயன் கொள்வது? எனவே தான் நமது இலட்சியம் நிறைவேற இவர்களது தொண்டு தேவையாதலால், இவர்களெல்லாம் அயராது பணியாற்றும் விதத்தில் ஜனநாயக அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டுள்ளது.

பணி தொடங்குங்கள்

எனவே, நம் நாடு வாழ, நமது கழகம் வளர்ந்தாக வேண்டும். வளரும் வாலிபர் நிறைந்தஇவ்வியக்கம் அறிவிலும் அண்ணாவை, அறிவையே செல்வமாகக்கொண்ட தோழரைத் தனது பொதுச் செயலாளராகக் கொண்டுள்ள இக்கழகம் வளர்ந்தே தீரும இலட்சியத்தை அடைந்தே தீருவோம் என்பதில் எனக்கு உறுதி இருக்கிறது.

மாநாட்டில் கலந்துகொள்ளும் தோழர்கள் மேலும் மேலும் ஊக்கமாகப் பணியாற்றவேண்டு மென்பதோடு, எத்தகைய அடக்குமுறையையும் எதிர்த்து நிற்கும் வல்லமையை நாம் பெற வேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறேன் இந்த அளவில் எனது தலைமையுரையை நிறுத்திக்கொண்டு எனது மனமார்ந்த நன்றியறிதலையும், மகிழ்ச்சியையும் எனக்குத் தலைமை வகிக்கும் வாய்ப்பளித்த வரவேற்புக் குழுவினருக்கும் மற்றுமுள்ள மாநாட்டினர் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரஷ்ய மக்களிடையே அதிருப்தியாம்!

லண்டன், ஜன. 2—

ரஷ்யாவில் மக்களிடையே அதிருப்தி அதிகரித்து வருகிறது என்றும், மெதுவாக வேலை செய்வது என்ற மனப்பான்மை தொழிலாளர்களிடையே பரவி வருகிறதென்றும், இதைச் சரிப்படுத்தும் வேலை மாஸ்கோவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்றும் அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இலகுரகத் தொழில்தான் ரஷ்யாவிலேயே மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தொழில் என்று கூறப்படுகிறது. —ரூட்டர்.

கிழக்கு ஜெர்மன் பிரதமருக்கு சிட்[illegible]?

பெர்லின், ஜன. [illegible]

கிழக்கு ஜெர்மனியின் பிரதமராக உள்ள கோட்வால்டுக்கு சிட் [illegible] [illegible] [illegible] [illegible] அவருக்குப் பதிலாக கம்யூனிஸ்ட் தலைவர் வெ'வால்டர் உல்பி[illegible] நியமிக்கப்படவிருக்கிறார் என்று வெளியான செய்தியின் உண்மையானவைதான் என்ற நம்பிக்கை மேற்கு ஜெர்மனியில் வலுத்து வருகிறது.

கோட்வாலின் மனைவி இப்பொழுது [illegible] இருக்கிறார். தன் கணவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டுவிட்டதால், அவர் வெளியேறிவிட்டார் என்ற செய்தி வலுத்து வருகிறது.

கோட்வால் ஆஸ்பத்திரியில் சமீபத்தில் சிகிச்சை பெற்றுர் என்றும் ஓய்வு எடுத்துக்கொள்ள அனுப்பப்பட்டிருக்கிறார் என்றும் கிழக்கு ஜெர்மனியில் கூறப்படுகிறது. (மல்டேரியாவில் கம்யூனிஸ்ட் தலைவராக இருந்த பெரி [illegible] விஷயத்திலும் இம்மாதிரி செய்யப்பட்டது நினைவிருக்கலாம்)

பீர்பகோரோவை பதவியில் நி[illegible] நிறுத்தவும்

ஜமீயத் இபகாரோ தலைவர் வேண்டுகோள்

ஐதராபாத் (சிந்து) ஜன. 5—

பீர்பகோரோவை அவருக்குள்ள பொறுப்பை அடையும்படி பாகிஸ்தான் செய்ய வேண்டும் என்றும், ஹர் நிலைமுறைகளை [illegible] விடவேண்டும் என்றும் ஜமீயத் இபகோரோ ஸ்தாபனத்தின் தலைவர் கலீபா முகம்மது ரஹீம் ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அவர் தன் அறிக்கையில் கூறியிருப்பதாவது பாகிஸ்தானிலுள்ள இதர மதப்பினர் போலவே ஹர்கள் தேச பக்தி கொண்டவர்கள் தான். நாட்டிற்காக இவர்கள் எவ்வித சேவையும் செய்யத் தயாராக இருக்கின்றனர். பீர்பகோரோவை அந்தஸ்துடன், நடத்துவது ஹர்களிடம் நல்லெண்ணம் ஏற்படுவதாகக் கருதப்படும்.

சோவியத் ஜெர்மனியில் உற்பத்திப்பெருக்க இயக்கம்

லோலன், ஜன 1—

சோவியத் ஜெர்மனியிலுள்ளவர்களுக்கு உற்சாகம் ஊட்டும்படியான சில காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. உற்பத்தியில் புதுசிகரத்தை எட்டுகிறவர்களுக்கு சம்பளம் கூடக் கொடுக்க என்ற ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பெர்லினிலுள்ள [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வேலைக்கு வேண்டாம் என்ற கோட்டையையும் நாற்பது [illegible] ஜெர்மனியர்களுக்கு அளித்திருக்கிறது.

யூகோஸ்லாவ் பல்கேரிய பயங்ரவாதிகள் இறக்குமதி

பெல்கிரேட், ஜன 2—

டிட்டோவை எதிர்த்து [illegible] டிக்கை எடுப்பதில் முனைந்துள்ள [illegible] ரூமினியா பல்கேரிய விலிருந்தும் அல்பேனியாவிலிருந்தும் பலர் யூகோஸ்லாவியாவிற்குள் நுழைய [illegible] யூகோ [illegible] அதிகாரிகள் [illegible] கூறுகிறார்.

யூகோ [illegible] விவசாயிகளிடையே [illegible] கொண்டுவிட்ட மூன்று பயங்கரவாதிகள் இ[illegible] [illegible] [illegible] [illegible] னர்.

ழிப் பிள்ளையைத் தோண்டிவைத்து ராடிக்கிருர் டாக்டர் கரே!

—————(0)—————

பாகிஸ்தான் சட்டவிரோதமான ஆட்சியாம்!

————:(0):————

சட்டத்தின் துணைநாடி நாஜிசத்தை வளர்ப்பதா?

பாகிஸ்தான் ஏற்பட்டதற்கு "சட்டபூர்வமான ஆதாரம்" எதும் கிடையாது. அதற்கு ராஜாங்க அந்தஸ்து உண்டா என்ற பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்பத்தக்கது.

இந்திய மக்களை கலந்தாலோசிக்காமல் ஜின்னு, நேரு, மவுண்ட்பாட்டன் மூவரும் தங்களாகவே பிரிவினைக்கு முடிவு செய்துவிட்டதாக கூறிவிட்டு, உண்மையில் தேசம் பிரிக்கப்படுமுன் பிரிவினை சம்பந்தமாக மக்களிடையே வோட் எடுத்து அபிப்ராயம் தெரிய வேண்டுமென மவுண்ட்பாட்டன் வற்புறுத்தினர்.

பாகிஸ்தான் விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிதான் மகா சபைக்கும், காங்கிரசுக்குமிடையே வேற்றுமை உள்ளது.

பாகிஸ்தான் ஒரு "விரோதி நாடு"

இவை, நடந்த 29—12—49 இந்து மகா சபைத்தலைவர் டாக்டர் கரே வெளியிட்ட அறிக்கையில் காணப்படும்கருத்துகள்.

பாகிஸ்தான் பிரிவினை, சட்ட விரோதமானதாம். அதற்கு ராஜாங்க அந்தஸ்து உண்டா இல்லையா என்ற பிரச்னை ஐ. நா. சபையில் எழுப்பப்பட வேண்டுமாம். இதுதான் டாக்டர் கரே காணும் கனவு.

இந்திய உபகண்டம் இந்துக்களின் ஏகபோக சொத்து என்று கருதிக்கொண்டு, குழி பிள்ளையைத் தோண்டி வைத்துக் கொண்டு பாராட்டுகிறர் தோழர் கரே. மக்களின் நலிவிட்டு காட்டியே இந்த வெள்ளம் ஓடச் செய்த பின்தான் பாகிஸ்தான் பிரிவினை செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பயங்கர நிலை ஏற்படு தற்கு முன்பே பாகிஸ்தான் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதை அப்படி பட்ட நிலை அறிவிட்டது. எனினும் பிரிவினை ஏற்பட்ட பிறகு இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு நிலைக காண்பதே அறிவுடையோர் செயல்.

இன்று, டாக்டர் கரே விடுத்திருக்கும் அறிக்கை தற்போதுள்ள நிலைமையை மேலும் மோசமாக்கத்தான் பயன்படுமேயன்றி அமைதிக்கு வழிகோலுவதாகாது.

இவ்வறிக்கை இந்துமத வெறியின் விபரீதப் போக்கேயன்றி வேறில்லை. உலகம் மனித உரிமைக்கும், பொருளாதார, சமத்துவத்துக்கும் போராடிக்கொண்டிருக்கும் ... கரே ... ஏகாதி ... பத்திய வெறிகொண்ட அவரது கருத்து அவர் பால் பரிதாபம் கொள்ளுகிறேம்.

பாகிஸ்தான் ஒரு "விரோதி நாடு" என்று வெளிப்படையாகச் சொல்லுகிறர் கரே. வென்றல், அவரது இன வெறிக்கும் மத வெறிக்கும் இதைவிட வேறு எடுத்துக்காட்டு என்ன தேவை? பகைவர்களையும் நண்பர்களாக மதித்து நடக்க வேண்டிய நிலையிலுள்ள இந்தியாவில் ஒரு பொறுப்புள்ள மனிதர் இம்மனம் போனபடி அறிக்கை வெளியிடுகிறரென்றல் இந்தியாவின் எதிர் காலத்தில் அமைதி நிலை மூடியும் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

"சட்ட விரோதம்" என்ற சொல்லைக் காட்டி பாகிஸ்தானைப் பயமுறுத்துகிறர் தோழர் கரே. கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்கென்று ஒரு அரசாங்கம் அமைத்துக் கொள்வது சட்டவிரோதமா? இது எந்த நிலையில் அடங்கும்? மக்களின் உரிமை வேட்கையை விடவா சட்டம் பெரிது? சட்டம் மனிதனுல் இயற்றப்படுவது. எனவே அது மனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு அமைந்த கொள்கைகளும். உரிமை வேட்கை அடிப்படையில் அது இயற்கையின் பாற்பட்டது. அந்த இயற்கை உணர்ச்சி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த எந்த சட்டத்தாலும் இயலாது. எவ்வளவு கடினமான சட்டமானாலும் அது கால வெள்ளத்தால் அழிக்கப்படுவதே இயல்பு.

எனவே, வெறும் சட்டத்தை மாத்திரம் நம்பி நாட்டு நலத்தை பலியிடக்கூடாது. இந்தியா ஒரு சிறு நாடல்ல. கரே கூட்டத்தினரைப் போன்ற ஒரு சிலருக்கு மாத்திரமே சொந்தமானதல்ல. பல இனம், பல மதம், பல கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு உப கண்டம் என்பது உலகறிந்த உண்மை. இந்த உண்மையை மறந்து, எதையும் பேசுவதோ, எழுதுவதோ அறிவுடைமையாகாது. சட்டத்தின் துணை கொண்டு இந்தியாவில் ஏகபோக ஆட்சி நடத்த கரே கும்பல் விரும்புவது ஆபத்தானது, என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேம். இந்தியா குடியரசாகப் போகிறது. எனவே, நாம் இட்டது தான் சட்டம் என்ற நினைக்கரே கும்பலுக்கோ, அதன் அன்புக்கும் பாத்திரமான இந்தியா ஆட்சியாளருக்கோ இருக்குமானல், அவர்கள் இந் நாட்டைக் ... பிடண்டிக் காலத்துக்கு அழைத்துச் செல்லுகிறர்கள், இன நாயகத்தை சாகடிக்கிறர்கள், நாஜிசத்துக்கு புத்துயிர் கொடுக்கிறர்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

புது இந்தோனேஷ்யாவுக்கும் கம்யூனிஸ்டு ஆபத்து!

லண்டன், ஜன. 2—

ஆசியாவில் பெரும் மக்கள் தொகை கொண்டதில் ஐந்தாவது நாடாகக் கருதப்படும் இந்தோனேஷ்யா சுதந்திரம் அடைந்ததைப் பாராட்டி 'ஸ்குடேட்டர்' என்ற புனைப்பெயர் எழுத்தாளர் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறர்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை இவைகளுக்கு அதிகாரமாற்றம் செய்தபோது அங்கெல்லாம் நிர்வாகத்தைப் பயிற்சி பெற்றவர்கள் ஏற்கனவே இருந்தனர். அந்த மாதிரி சௌகரியம் இந்தோனேஷ்யாவுக்கு இல்லை.

அத்துடன் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்கனவே தங்கள் வரிசையைக் காட்டியிருக்கின்றனர். மாசேதுங் சீனுவைக் கைப்பற்று முன்பே இந்தோனேஷ்யாவில் காட்டம் கொண்ட கம்யூனிஸ்டுகள் இப்பொழுது இன்னும் அதிக பலம் பெற்றிருக்கின்றனர். இந்த ஆபத்தை டாக்டர் சுகர்ணுவும் டாக்டர் ஹட்டாவும் அறியாமலிருக்க முடியாது. இந்த ஆபத்து எதுவும் இந்தோனேஷ்யா வெற்றிகரமாக சமாளிக்கும் என்றே நம்புவோம்.

———

வியட்னமுக்கு அதிகார மாற்றம்

லண்டன், ஜன. 1—

பாவ்டேயிடம் வியட்னம் அதிகாரத்தை பிரான்ஸ் மாற்ற விரும்புவது குறித்து பிரெஞ்சு பத்திரிகைகள் வெறுமைப்படுத்திக் கொள்கின்றன ... என்ற பாரிஸ் பத்திரிகை அதிகாரத்தை பாவ்டேயிடம் ஒப்படைக்க விவேதன் மூலம் இந்தியாவில் பிரிட்டனும் இந்தோனேஷ்யாவில் டச்சுகளும் போல் பிரான்ஸ் நடந்துகொண்டு விட்டதாகப் பிரமாதப் படுத்துகிறது.

இப்பொழுதுள்ள ஏற்பாட்டின்படி பிரெஞ்சுத்துருப்புகள் விலகாமல் இருந்தவரும் என்பதைக் குறித்து மான்செஸ்டர் கார்டியன் எழுதியிருப்பதாவது — பிரெஞ்சுத் ஹோசிமின் துருப்புகள் மட்டும் இல்லை என்றால் ஹோசிமின் துருப்புகள் பாவ்டேயை வெகு சீக்கிரம் இந்தோசீனுவிலிருந்தே விரட்டிவிடும். ஹோசிமின் துருப்புகள் உள்நாட்டில் போதிய பலத்துடனேயே இருக்கின்றன. போதாக் குறைக்கு சீனகம்யூனிஸ்டு சார்களின் உதவியும் அவைகளுக்கு இருக்கின்றன. பிரெஞ்சு சர்க்கார் உண்மையிலேயே அதிகாரத்தை ஒப்படைத்து விட்டதாக சிருப்பிப்பதிலேயே பாவ்டே சர்க்கார் நிலைமை நாட்டுவது இருக்கிறது.

———

க்ஷய ரோகத்தைத் தடுக்க புது மருந்து

லண்டன் ஜன, 1—

என் புருக்கி நோயை க்ஷய ரோகத்தைத் தடுக்க திறமையான ஒரு புது மருந்தை பிரிட்டன் கண்டு பிடித்திருக்கிறது. பி. எ. எஸ். என்ற இந்தப் புது மருந்தைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட விருக்கிறது. இந்த மருந்து சுமார் 6000 நோயாளிகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு வருகிறதாம்.

———

பம்பாயில் இராக்கின் உதவிகான்ஸலாக எல் ஸையத் பாரமான்ஜி ... நியமிக்கப்பட்டிருக்கிறர்

மலானின் நிறத்திமிர் கொள்கைக்கு சுதேசிகள் பலத்த எதிர்ப்பு

பலத்த எதிர்ப்பு சாத்வீக முடிவுகண்டு தொடை நடுக்கம்!

கேப்டவுன், ஜன 2—

நிறத்திமிர் கொள்கையை ஒழிக்க ஆப்பிரிக்கர்கள் காந்தியார் கற்பித்த சாத்வீக ஒத்துழையாமையை ஆரம்பிக்கலாம் என்ற செய்தி கண்டு, மலான் சர்க்கார் கவலைப்பட ஆரம்பித்திருக்கிறது.

இந்த சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தை அனுசரிக்கும் விஷயமாக ஆப்பிரிக்க தேசிய காங்கிரசும், ஆப்பிரிக்க கன்வென்ஷனும் தீவிரமாக யோசித்து வருகிறது. இந்த இயக்கம் ஆரம்பமானல் இதனல் கைத்தொழிலும் நாட்டின் நிர்வாகமும் பெரிதும் பாதிக்கப்படுவது நிச்சயம் என்று கருதப்படுகிறது

நிறத்திமிர் இல்லாத ஒரு சர்க்கார் ஏற்பட வேண்டுமென்பதே தங்கள் லட்சியம் என்றும், இதற்கு அகிம்சையை அடிப்படையாகக்கொண்ட இந்த அரசியல் ஆயுதமே அதற்கு சிறந்ததென்றும் ஆப்பிரிக்கத் தலைவர்கள் கருதுகிருர்கள்.

———

திராட்சைக்கு வரும் வியாதிகள்

அம்மான், ஜன. 2—

திராட்சைக் கொடிகளுக்கு வரும் ஒருவித வியாதியை வேறு இன திராட்சைக் கொடியைக் கொண்டு ஒட்டு முறை. செர்வதன் மூலம் போக்கிவிடலாம், என்பது ஜோர்டனில் ஆராய்ச்சி செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி வழி இதுவரை உலகிலேயே கண்டுபிடிக்கப்படவில்லை இப்புதுமுறை பிரிட்டன் பிரான்ஸ் ஸ்பெயின் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

———

அணுக்குண்டு ஆபத்தை எதிர்த்து நிற்க..!

லண்டன், ஜன. 2—

அணுக்குண்டுகளால் அழிவின்றும் தப்ப பல உலோகங்கள் கலந்த ஒரு செயற்கை உலோகம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

இந்த உலோகம், அணுசக்தி கிரணங்களை ஆகர்ஷித்துகொண்டு மனிதர்களுக்கு ஆபத்தில்லாமல் செய்கிறதாம் இதை பிரிட்டிஷ் சப்ளை மந்திரி, காரியாலயத்தினர் பரிசோதித்துப் பார்த்து வருகின்றனர்.

இதைக் கொண்டே விமான தாக்குதல் பாதுகாப்பு குகைகள் கட்டலாமாம்.

இதன் மீது அணுகுண்டின் ரேடியோ ஆக்டிவ் ... படாது ... இதை பிளவுபடுத்த ... அந்த ...

———

இந்தோனேஷ்யா வெற்றி பற்றி அஸ்ஸாம் பாஷா

கெய்ரோ, ஜன. 2—

உலக முஸ்லிம் மாநாடு காரியதரிசி கொண்டாடிய இந்தோனேஷியா வெற்றி தினத்தையொட்டி அரபு லீக் காரியதரிசி அஸ்ஸாம் பாஷா அனுப்பியுள்ள செய்தியில், இந்த வெற்றி மகத்தானதென்றும் ஆசியாவின் ஆத்மீகத்துறையில் ஏற்பட்ட வெற்றியாகும் என்று குறிப்பிட்டிருக்கிறர்.

ரஷ்யா-தென்னப்பிரிக்கா உறவு முறியும்?

லண்டன், ஜன 2—

தென்னப்பிரிக்க சர்க்கார் கம்யூனிஸத்தை ஒழிக்க ஒரு பெரும் திட்டத்தைத் தயாரித்து வருகிறதென்றும் ரஷ்யாவுடன் ராஜிய உறவு முறியும் அளவுக்குகூட போகலாம் என்றும் இங்குள்ள வட்டாரத்தினரிடையே கூறப்படுகிறது.

நீதி இலாகா மந்திரி தயாரித்துள்ள இத்திட்டத்தை மலான் மந்திரி சபை பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

தென்னப்பிரிக்காவிலுள்ள ஸ்தானிகாலயங்கள் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளுக்கு பிறப்பிடமாக இருப்பதைத் தீர்க்க சோவியத் ரஷ்யாவுடன் உறவு முறித்துக்கொள்ளப்படலாம் என்று கூறப்படுகிறது.

கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளுக்கு பிறப்பிடம் பிரிட்டோரியாவிலுள்ள ரஷிய ஸ்தானிகாலயம்தான் என்று மந்திரிலோ வெளிப்படையாகவே கூறியிருக்கிருர் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்கள் தடைசெய்யப்படுவது நிச்சயம் என்று ஒரோசிருபர் கூறுகிறர்,

கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடைவிதிப்பது என்றல் ரஷ்யாவுடன் ராஜிய உறவு அறவேண்டும் என்பது அவசியமில்லை என்றும் ரஷ்யா தங்கள் ஸ்தானிகாலயங்களிலுள்ள ஆட்களைக் குறைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படலாம் என்று அவர் கூறுகிறர்.

———

ஐ. நா. பற்றி இஸ்ரேல் பயம்

அம்மன், ஜன. 2—

ஜெருசலம் சர்வதேசக் கட்டுப்பாட்டுக்குட்பட்டிருக்க வேண்டுமென்பதை இதுவரை இஸ்ரேல் உத்தியோகபூர்வமாக ஆட்சேபிக்கவில்லை.

ஐ. நா. ஸ்தாபனத்தை வெளிப்படையாக எதிர்க்க இஸ்ரேல் பயப்படுவதே இதற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று இங்கு கூறப்படுகிறது.

———

சிகிச்சையின் போது இறப்பது யார் குற்றம்?

நியூயார்க், ஜன 2—

புற்று நோயால் அவதிப்பட்ட 60 வயது மாது ஒருத்தியை சிகிச்சையின் போது மாண்டதற்காக அவளை பரிசோதித்த டாக்டர் ஹெர்மான் ஸண்டர் மீது வழக்கு தொடரப்பட்டு அவர் ஜாமீனில் விடப்பட்டிருக்கிறர்.

இவ்விஷயமாக அவர் மீது நடவடிக்கை எடுப்பது தவறு என்று சிலரும் நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும் என்று சிலரும் அபிப்ராயங்களை வெளியிட ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த டாக்டருக்கு ஆதரவு தெரிந்து ஆயிரக்கணக்கான செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

நோயினுல் கஷ்டப்படுவோரைவிட இறப்பதுமேல் என்றநோக்கமாக ஆசிரிக்கும் சங்கத்தினர் இம்மாதிரி கேஸ்களில் டாக்டர்களை ... செய்யவிருக்க சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்ற ஒரு விசேஷக் கூட்டத்தைக் கூட்ட விருக்கின்றனர்

திக்கெட்டும் பரவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இருந்திருக்கின்றோம். நம்மிலே பலர் பணியாற்றியும் வந்திருக்கின்றோம். பணி புரிந்தவர்களில் பெரும்பாலோர் (அங்கே கண்ட அதே முகங்கள் அதே கண்கள்) இங்கே காணப்படுகின்றனர். எனவே திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகத்திலிருந்து, பிரிந்துவர நேரிட்டவர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்றபோதிலும், மிக்க பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து வெளியேறியவர்களாகிய நாம் மிகப் பெரும்பான்மையோராதலினாலே தான், உண்மையான திராவிடர் கழகமே—நீதிகட்சியே - சுயமரியாதை இயக்கமே — இங்குள்ளது எனப் பூரிக்கும்படி அதன் உயிர்த்தன்மை திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒளிவிடுகின்றது. திராவிடர் சமூகமே தங்கள் வாழ்வு, அதன் இலட்சியமே தங்கள் மூச்சு என்று தொண்டாற்றிய தோழர்களெல்லாம், இளைஞர்களெல்லாம், சம்பத்துக்களும் நெடுஞ்செழியன்களும், அன்பழகன்களும் நடராசன்களும், சிற்றரசுகளும், ஆசைத்தம்பிகளும் குறிப்பாக எஸ். வி. லிங்கமும் இங்கே உள்ளனர், இலட்சியத்திற்குப் பணியாற்றியபடி.

உறுதியும் உள்ளத் தூய்மையுமே காரணம்

நமது தலைவராக நாம் ஏற்றுப்போற்றிவந்தவர், நாம் எந்தக் கொள்கைகளுக்காக அவரைப் போற்றி வந்தோமோ, அந்தகொள்கைகளுக்கே இழுக்குத் தோன்றும்படி நடந்து கொண்டமையினால்தான் அவரை விட்டுவிலகியேனும், கொள்கைகளைக்காத்து, இலட்சியத்தை அடைவதற்காக இந்தப் பழைய இயக்கத்தைப் புதுப்பெயரால்தோற்றுவித்துள்ளோம். கொள்கைகளிலே மாற்றமில்லை. இலட்சியத்திலே தவறவில்லை. இது நமது கொள்கைப்பற்றையும் உள்ளத் தூய்மையையும் உறுதிப்படுத்துவதாகும்.

தந்தையை இழக்கச் சம்மதித்தும் சேயைப்போல்,கொள்கையில் கொண்ட உறுதிக்காகத் தலைவரையே இழக்கவும், விலகவும் சம்மதித்தோம் எனில், நமது கொள்கைகள் எத்தகைய இடையூறு ஏற்படினும் அழியாது, பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. தந்தையின் உண்மையான பகுத்தறிவுப் பண்பாட்டைச் சிதைத்து, செந்நெறியை, திராவிட மறுமலர்ச்சியை தோற்றுவிக்கும் திறம் [illegible] த்தவர்கள் நாம் தான் என்ற மன எழுச்சியும் தோன்றுகிறது அந்த எழுச்சியோடும், உணர்ச்சியோடும் நாம் பணியாற்றுவோமாக. நமது பணி திராவிடர் கழகப் பணிக்கு முரண்பட்டதுமல்ல நோக்கத்தால் வேறுபட்டதுமல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் கூறியுள்ளதுபோல, திராவிட முன்னேற்றக் கழகம்; திராவிடர் கழகத்திலிருந்தே கிளைத்துள்ளதாகிலும், ஆலமரத்திற்கு விழுதைப்போன்றதாகுமேயன்றி, வாழைக்கன்றாகாது. அமைச்சரவையின்றி சமூகத்துறையில், பொருளாதாரத் திட்டத்தில், அரசியல் அமைப்பில், நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவற்றையும் எண்ணிப் பார்க்கும் எவராலும், இப்படி இரு கழகங்களும் பணியாற்றுவது பயனற்றதென்றோ, தீதானதென்றோ கருதவியலாது. இரு கழகங்களும் அதனதன் முயற்சிக்கு ஏற்ப நாட்டிற்கு நன்மை செய்யலாம் மக்கள் முன்னேற்றத்திற்கு வழிகாணலாம்.

பலப் பரீட்சை வேண்டாம் பணியாற்றுவோர் வாரீர்!

அதிலும் இன்றைய அரசாங்கத்தின் எதேச்சாதிகார வெறியையும், பாசிசப் போக்கையும் உணர்பவர்கள்- அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல் ஜனநாயகத்தை, மக்களாட்சியை மலரச்செய்ய — இரு கழகங்களும், இரட்டைக் குழல் துப்பாக்கியாக இயல்பாகவே விளங்க வேண்டுமென்றே விரும்புவர். பலமுள்ளவர் யார்? வலிவு பெற்றவர் யார்? என்ற பேச்சு திராவிட மக்களிடையே உலவுவதைவிட, எது உடனடியாக நிறைவேற்ற வேண்டிய பணி! எது நமது கடமை? என்ற எண்ணம், கருத்து நிலவவேண்டும் என்பதே நமது விருப்பமும், வேண்டுகோளுமாகும். மேலும் நாம் பதவி பெறுவதற்கென்றோ. பட்டம் தேடுவதற்கென்றோ, சுயநலத்தைப் பாதுகாத்துக் கொள்ளவோ இக்கழகத்தை தொடங்கியவர்களல்ல இவைகள் நமது எண்ணமானால். இவைகளுக்கு இடமில்லாத திராவிட கழகத்தில் இவ்வளவு காலம் இருந்திருக்க வேண்டியதில்லை அதுமட்டுமன்றி அதே லட்சியத்தை, கொள்கையைக் கொண்ட இபக்கத்தையே இப்பொழுதும், அமைத்துக் கொண்டிருக்கமாட்டோம். அதற்கு மாறாக, இப்பொழுதேனும்-சங்கர்ப்பத்தை நழுவவிடாமல்-இதேகாரணத்தைச் கூறிக்கொண்டு, அந்த ஆசைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய, தேசிய கட்சியிலாவது சேர்ந்திருப்போம். எனவே நமது திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களுக்கு நற்பணி புரியு[illegible] நோக்[illegible]ஒன்றையே [illegible] கொண்டதை [illegible] நாம் மறு[illegible]த் [illegible]ணியர்,

துன்பம் துடைக்க வாரீர்!

[illegible]ன்றே, ம[illegible] நாம் பசி பட்டினிக்கு, நய்[illegible] இரையான [illegible] எளியவர். நாய் நோயினின்று காக்க, மருத்துவ வசதிக்கோ, பசி, பட்டினியினின்று மீட்க உணவுப் பொருளுக்கோ வறுமையினின்று காக்க பொருளாதார நிலை உயர்வுக்கோ, எந்த விதமான சீரிய திட்டத்தையும் கொள்ளவில்லை அரசாங்கம். ஏழை எளியவரின் துன்பம், எரிமலையின் புகைச்சலென்ன வானளாவுகிறது.

தொழிலாளர்களின் துயரம். உழவரின் ஏக்கம், கடும் புயலென, காட்டாற்று வெள்ளமென உருவாகின்றன. அரசாங்கமோ அமைதியற்ற நிலையில் ஆட்ட அவசரச் சட்டம், அமைதி பாதுகாப்புச்சட்டம் என்ற திட்டங்களை — மக்கள் மனம் என்னும் எண்ணெயைக் கிளறிவிட்டபடி உள்ளது.

இந்தப் பாசிசப் போக்கு மாறினாலொழிய என்றைக்கும், ஆபத்து சூழ்ந்த, நிச்சயமற்ற நிலையே காணப்படும் இப்போக்கு மாற, எதேச்சாதிகாரம், பாசிசம் ஒழிய வேண்டும்.

மக்களாட்சி மலர மக்களைப் பிடித்துள்ள பழமை மடியவேண்டும். வருணாசிரமக் கொடுமை, சாதிச சனியன், வைதிக தர்மம், புராணப் பித்தம், கண்மூடிப் பழக்கம், மூடநம்பிக்கை ஆகியவற்றையெல்லாம் அவற்றின் ஆணிவேரோடும், மக்கள் மனத்திலிருந்து களைந்து எறிந்தாக வேண்டும். அதன் பின்னும் அரசியல், பொருளாதாரத் துறை, சமூக வாழ்வு ஆகியவற்றைக் குறித்து தெளிவான கருத்துக்கள்பதியும்படி விளக்கந் தந்தாகவேண்டும்.

உரிமை பறிபோகிறது

பகுத்தறிவுடன் கூடிய சிந்தனையும், சுயமரியாதையுடன் கூடிய தன்னம்பிக்கையும் தோன்றச் செய்யவேண்டும்- மக்கள் தாங்கள் பெற்றுள்ள வாக்குரிமையை நல்ல முறையிலே பயன்படுத்தி, நல்லாட்சியை ஏற்படுத்திக்கொள்ள இவற்றை நிறைவேற்றத்தான் நம் முன்னேற்றக் கழகப் பணியாற்றுகிறது ஆனால், அரசாங்கமோ, நமது பிரசாரத்திற்கு ஆங்காங்கே 144, பத்திரிகைகட்கு ஜாமீன், புத்தகங்கள் பறிமுதல், எழுதியவர் மீதும், அச்சகத்தார் மீது வழக்கு,நாடகங்கட்குத் தடைஎன்ற தனிக்காட்டாட்சி முறையைக் கையாண்டு வருகிறது. இவற்றிற்கெல்லாம் நாம் அஞ்சவில்லை, எனினும், நமது உரிமைகள் பறிக்கப்படுவதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க வியலாது.

தேசிய கட்சியினரோ தமது கடைசி ஆயுதமாகிய தூற்றல் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளனர்.

அமைச்சர்களும் தமது திறமையையெல்லாம், நம்மைத் தாக்கிப்பேசவும், வாயடைக்கச் செய்யவுமே பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் கொண்டை கிழியக்கூவிய, 'பசுரிமையும் எழுத்துரிமையுமே இன்று பறிக்கப்படுகின்றன. ஆனால், இச்சுளவு, ஆதிக்கவாதிகளாக உள்ள அமைச்சர்களும் வாய் [illegible] போகின்றனர். மத்திய சர்க்காரின் அதிகாரத் [illegible]னி கேட்கு [illegible] லாம் உண்மையில் உரிமை யிழந்திருக்கும் மாகாண சர்க்கார், ஊரார் உரிமைக்கு உலைவைக்கத் தயங்கவில்லை.

தனி ஆட்சியும் தன்னாட்சியும் வேண்டும்

இந்த நிலை மாற—திராவிடநாடு, தென்னாடு— தனிபுரிமையதாக வேண்டும். முழு ஆட்சி பெற வேண்டுமென நாம் விரும்புகிறோம். சமூகத்தில் சமத்துவமும் அரசியலில் சுதந்திரமும், பொருளியலில் சமத்துவமும் நிலவ வேண்டுமானால், தென்னாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளில் [illegible] ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் திரும்பி வந்து வாழ்வு பெற வேண்டுமானால் நம் நாடு தனியாட்சி, தன்னாட்சியதாக வேண்டும். அதனைத் தான் திராவிடநாடு— திராவிடருக்கே என்பது, நமது இலட்சியமுழக்கமாக அமைந்துள்ளது. இந்த இலட்சியத்தை அடையவும், ஜனநாயகம் வளரவுமே நமது திராவிடமுன்னேற்றக் கழகம் தொண்டாற்றுகிறது.

வெற்றிக் காண்போம்

இம்மாநாடு நமது கொள்கைகளின் வெற்றிக்கு ஆன திட்டங்கள் தீட்டவேண்டுமென விரும்புகிறேன். நமது அறிஞர் அண்ணா அவர்களின் தன்னலமற்ற தொண்டும், உறுதியும், தெளிவும், நமது பெருந்துணையாக அமைந்துள்ளன. அவர்களை பொதுச் செயலாளராகக் கொண்டுள்ள நாம், மாவட்டங்கள் தோறும் தளபதிகளையும், தொண்டர்களையும் கொண்டுள்ள நாம் தொடர்ந்து பணியாற்றுவதும்வெற்றி காண்பதும்உறுதி.

எனவே இம்மாநாட்டு தலைவர்களையும், துவக்கிவைப்பவர்களையும் மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு, மாநாட்டைச் சிறப்பாக நடத்தித்தரக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அனைவரையும் மறுமுறையும் வருக, வருக வென வரவேற்கிறேன். வாழ்த்து கூறுகின்றேன், வணக்கம் தெரிவிக்கின்றேன்.

வாழ்க திராவிடம்

வளர்க திராவிட முன்னேற்றக் கழகம்.

மழையின்மையால் விவசாயிகள் படும் அல்லல்

சங்கரன் கோவில் தாலுகா மக்கள் தவிப்பு

பயிர்கள் தீய்ந்துவிட்டன

சங்கரன் கோவில், ஜன. 2—

31—12—49-ல் சங்கரன் கோவில் முனிசிபல் [illegible] தோழர் எஸ். எம். [illegible] அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் அனைத்து கட்சிகளும் தோழர் [illegible] சன்னை[illegible] வும் இந்த தாலுகாவில் மழை பெய்யாமல் குளங்களில் தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் தீய்ந்துவிட்டதனால் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தை விளக்கியும் சர்க்காரின் கடமை பற்றியும் பேசினார்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

சங்கரன் கோவில் தாலுகா முழுவதும் மோரிய கால மழை இல்லாமல் குளங்களில் தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் தீய்ந்துவிட்டன. இத்தாலுகாவில் முக்கியமாக செல் விளையும் [illegible] பிரதேசங்களான [illegible] ஜமீன், [illegible] ஊர் [illegible] சிர்ராமணி [illegible] குளங்களில் தண்ணீர் இல்லாமல் [illegible] குறைவால் பயிர்கள் தீய்ந்துவிட்டன. இதனால் இந்த தாலுகாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கும் செலவுத் தொழிலாளர்களுக்கும் வேலையில்லாக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்துகொண்டே போகிறது, கள்ள மார்க்கட்காரர்களின் கொட்டம் இன்னும் அடங்கவில்லை. ஆகவே,சர்க்கார் இந்தத் தாலுகாவின் பஞ்ச நிவாரணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேணுமாய் இக்கூட்டம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

இந்தத் தாலுகாவில் அநேக குளங்கள் கண்மாய்களை மராமத்துச் செய்ய சர்க்கார் திட்டம் செய்திருப்பதாய்த் தெரிகிறது. இக்கூட்டம் மகிழ்ச்சியடைகிறது. ஆகவே, பஞ்ச நிவாரணத்தின் பொருட்டு குளங்களின் மராமத்து வேலைகளைத் துரிதமாக ஆரம்பிக்க வேண்டிக்கொள்ளப்படுகிறது. (ச. ச.)

குழித்துறையில் தமிழ்நாடு எல்லை மாநாடு

தமிழ்நாடு எல்லை மாநாடு, குமரி [illegible], கேப் ஜோட்டா[illegible] வட பக்கமாய் அமைந்திருக்கும், மாநாட்டுப் பந்தலில், 1950-ஜனவரி மாதம் 6-ந் தேதி வெள்ளியன்று, மதுரை எஸ். [illegible] அவர்கள் [illegible] (இந்திய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்) தலைமையில் நடைபெறும். கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைப்பார்கள். தோழர்கள் ம.பொ. சிவஞானம், எஸ். என். சோமயாஜுலு, [illegible] கவிஞர் கா. மு. ஷெரீப், எஸ். டி. ஆதித்தன். [illegible], பி. எஸ்., [illegible], விசுவநாதம், நாரணதுரைக்கண்ணன், கோ. மோ. [illegible] பி. என்வி, பி. காம், தோழியர் இலட்சுமி பாரதி (எம். எல். ஏ, சென்னை) முதலியோர்களும் இன்னும் பலரும் கலந்து கொள்வர்.

மாநாட்டில் பிரதிநிதிகளாகவோ, வரவேற்புக் குழு அங்கத்தினர்களாகவோ கலந்து கொள்ள விரும்புவோர், 1950 ஜனவரி மாதம் 5-ம் தேதிக்குள் தங்கள் பெயர், அதற்கான கட்டணத் தொகையுடன் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். தமிழகத்தின் எல்லை [illegible] நிர்ணயிப்பதற்கென கூடவிருக்கும் இம்மாநாட்டில், தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் வந்துகொண்டு; மாநாடு வெற்றி பெறச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு :—பூமியன் தமிழகத்திலிருந்து மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகட்கு உணவு, தங்குமிடம் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் ஒவ்வொருவரும் ஜனவரி 5-ம் தேதி மாலை, குமரியில் தங்கள் படுக்கை வசதிகளுடன் வந்து சேர வேண்டும், என வரவேற்புக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

மடல் விடுதூது

சியாங்-கே-ஷேக்

பார்மோசா தீவு

சீனாவின் சங்கராச்சாரியாரே!

வணக்கம். தங்களுக்கு நீண்ட நாட்களாகவே மடல் விடுக்க வேண்டுமென்றிருந்தேன். எப்படி விடுப்பது? தங்களுக்குற்ற நிரந்தரமான முகவரியே கிடையாதே! குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையென்று கூறிக் கொண்டு திரிகிறீர். சீனா முழுதும் சிவப்பு ஆட்சியை மாற்றும், சீனாவுக்கு நானே தான் தலைவன் என்று கூறிக் கொண்டிருந்தீர். உலகத்திலே தான் தான் ஒரு எனது கூறிக்கொண்டு ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருக்கும் சங்கராச்சாரியார் போல நாங்களும் பிடிபட்டு ஒரு இடமாக மாறிக் கொண்டிருக்கிறீர்கள். "தண்டபுவுடோ தம்பிரான் புண்ணியம் என்றிருக்கும் பொழுது தீர்த்தலைமலைக்குச் சென்று விட்டு ஆட்டம் ஆடி விளக்கை நிறுத்தாத வில்லை இனி ... போது தங்களை ... பரிதாபப் படவேண்டியிருக்கிறது.

எனவே, வேண்டாம் வீண் முயற்சி. வெட்டிப் பேச்சு பேசும் வேலையை விட்டொழியுங்கள். தங்களின் செமினார் கூடி ஒழிந்து போய் விட்டது. இனியும் நாமென்ன 'தீக்கோழி வேலை' செய்து கொண்டிருப்பதில் பலனில்லை. தங்களின் எதிர்கால வாழ்வைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்து விடுங்கள். அத்தோடு விட்ட எந்த இடத்திற்கு ஓடுவது என்று எண்ணிக் கொண்டிருக்கும் இன்னும் எத்தனை நாளைக்குச் செல்லுபடியாகும்? அன்னக்காவடி ஆகிவிட்ட ... அமெரிக்காவின் ... திருப்பதுதான் விசேஷமாக இருக்கிறது. என்னமோ, தனிக்காட்டு ராஜாவாக நீண்டும் எவ்வளவு நாளைக்குத்தான் தங்களால் காலந்தள்ள முடியுமென்பதைப் பார்ப்போம்.

"எழுதுகோல்"

பொள்ளாச்சியில் பொங்கல் விழா!

15-1-50 ல் பிறந்த பொங்கல் விழாவை முன்னிட்டு இங்கு திராவிட முன்னேற்ற வாலிபர் கழகக் கட்டிடத்தில் காலை 10 முதல் 1 மணி வரை சொல்வெட்டுப் போட்டியும், மாலை 2 முதல் 3 மணி வரை சித்திரப் போட்டியும், மாலை 3 முதல் 5 மணி வரை இசைப் போட்டியும் நடைபெறும். ஒவ்வொன்றிலும் முதல் தரமான வைக்கு பரிசு பதக்கமும், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளும் வழங்கப்படும். கட்சி வேறுபாடின்றி யாவரும் கலந்து கொள்ளலாம். நிகழ்ச்சிகள் முழுதும் பொங்கல் விழா, தமிழ் முன்னேற்றம், பற்றியதாகவே இருக்கவேண்டும்.

போட்டியில் கலந்து கொள்வோர் தங்கள் பெயரை நேரிலோ தபால் மூலமோ, 12-1-50க்குள் பதிவுசெய்து கொண்டு, குறிப்பிட்ட வேளையில் வந்து கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

நேரில் வர இயலாத ஓவியர்கள் தங்கள் ஓவியங்களை அஞ்சல் மூலம் அனுப்பிவைத்தால் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

சமஸ்தானங்கள் இணைப்புச் சட்டத்திற்கு கவர்னர் ஜெனரல் அங்கீகாரம்

சென்னை, ஜன 2— சென்னை மாகாணத்துடன் இணைக்கப்பட்ட புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சந்தூர் இம்மூன்று சமஸ்தானங்களின் விஷயத்தில் சில மசோதா சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரும் சென்னை இணைப்பு சமஸ்தானங்கள் சட்டத்திற்கு கவர்னர்-ஜெனரல் அங்கீகாரமளித்தார். அச்சட்டம் நேற்று முதல் அமுலுக்கு வருகிறது.

ரயில்வே கால அட்டவணை

எழும்பூர்

(நவ. 10உதேதி முதல்)

புறப்படும் நேரம்

(மெயின் லைன்)

திருச்சி எக்ஸ்பிரஸ்	காலை	9-10
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை	3-45
செங்கோட்டை பா.	காலை	6.15
இண்டோசிலோன் எக்ஸ். இ.		8 10
திருவனந்தபுரம்பாஸ். பா.	,,	9-40
மதுரை பார்சல்பாஸஞ்சர்	,,	10-40

(கார்டு லைன்)

தனுஷ்கோடி பாஸஞ்சர் கா.		10 40
திருவனந்தபுரம் எக்ஸ். இ.		7 40
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	,,	9-20

பீச்சிலிருந்து

காஞ்சிபுரம் பாஸ்ட் பா.	மாலை	5-38
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	மாலை	5-59

வரும் நேரம்

செங்கோட்டை பா.	இரவு	9-15
மதுரை பார்சல் பா.	காலை	5-5
இண்டோசிலோன் எக்ஸ். கா.		7 20
திருவனந்தபுர பாஸ.	காலை	5-30
திருச்சி எக்ஸ்பிரஸ்	மாலை	7-15
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை	2-45

(கார்டு லைன்)

தூத்துக்குடி எக்ஸ்.	காலை	6-00
திருவனந்தபுரம்எக்ஸ்.	காலை	6-35
தனுஷ்கோடி பாஸஞ்சர் கா.		11-25

(பீச்சிற்கு)

காஞ்சிபுரம் பாஸ்ட் பா.	காலை	9 5
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	காலை	9-17

சென்ட்ரல்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு	9-35
கிராண்ட்டிரங் எக்ஸ்.	கா.	10-50
விசாகை பாஸஞ்சர்	காலை	8-0
விசாகை பாஸஞ்சர்	இரவு	7-35
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை	7-10
பம்பாய் மெயில்	இரவு	8-50
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை	8.55
பெங்களூர் மெயில்	இரவு	9-15
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	மத்	12-50
பெங்களூர் பாஸஞ்சர்	காலை	6-4
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு	9-20
ஜோலார் பேட்டை பாஸஞ்சர்	காலை	11-30
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை	6-33
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு	8-15
மலபார் எக்ஸ்பிரஸ்	காலை	9-5
கொச்சி எக்ஸ்பிரஸ்	மாலை	5-30
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு	7-25

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை	7-10
கிராண்ட்டிரங் எக்ஸ்.	மாலை	4-20
விசாகை பாஸஞ்சர்	காலை	10-10
விசாகை பாஸஞ்சர்	இரவு	8-35
பம்பாய் எக்ஸ்பிரஸ்	மாலை	7-10
பம்பாய் மெயில்	காலை	5-40
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை	4-55
பெங்களூர் மெயில்	காலை	6-
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	மாலை	3-40
பெங்களூர் பாஸஞ்சர்	காலை	5-30
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு	8-40
ஜோலார்பேட்டை பாஸ.	மத்	1-15
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை	7-5
மலபார் எக்ஸ்பிரஸ்	மாலை	5-20
கொச்சி எக்ஸ்பிரஸ்	காலை	9-0
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை	7-25

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

அறிவு நாட்குறிப்பு 1950

பையடக்கக் காலண்டர் — பல புதிய கருத்துக்கள் அடங்கியது!
அண்ணாவின் அழகிய வர்ணப்படம் கொண்டது!
விலை இரண்டணாதான்
அண்ணாவின் இருவர்ண முகப்புடன் கூடிய

பொங்கல் வாழ்த்து		ஒரு அணா
சாதாரண வாழ்த்து	—	அரையணா
அண்ணாவின் அறைகூவல்	—	0—3—0
அண்ணாவின் அறிவுரைகள்	—	0—3—0

கழிவு 25%. செலவு இனம்.

முன்னேற்றப் பண்ணை, 2/122, பிராட்வே, சென்னை.

சென்னையில் மூட்டைப்பூச்சி ஒழிப்பு!
329 நீர். ஸ்டால்
தேனும்பேட்டை பொருட் காட்சியில்
ரெஜினா மூட்டைப்பூச்சி பவுடரை
அனைவரும் உபயோகிக்கவும்
—: நித்திரைக்குப் பாதுகாப்பு :—
G. பழநியப்ப முதலியார், மதுரை.

விற்பனைக்குத் தயார்!

இன்பத் திராவிடத்தில் ஒரு புதுமை நிறைந்த

1950-ஆண்டு காலண்டர்

பேரறிஞர், சி. என். அண்ணாதுரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், உயர் திரு:—கே. கே. நீலமேகம், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஈ. வி. கே. சம்பத், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, தோழியர்கள்:— இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து.

மறைந்த செல்வங்கள்:— ஏ. டி. பன்னீர் செல்வம், அழகிரிசாமி, என். அர்ச்சுனன் முதலியவர்களின் திருவுருவப்படங்கள் அமைக்கப்பெற்றதும், மிகவும் உன்னதமாக வழவழப்பான ஆர்ட் தாளில் பல கலரில் கண் கவரும் முறையில் அச்சிடப்பட்டதுமான எல்லாத் தலைவர்களையும் கொண்ட ஒரே காலண்டர்

குறைந்த விலை 0-6-0

வியாபாரிகட்கு தக்க கமிஷன் உண்டு.
தேவைக்கு இப்பொழுதே எழுதி பெற்றுக்கொள்ளவும்.

விவரங்கட்கு:—
திராவிடன் பதிப்பகம், P. B No. 18, வேலூர். N. A.

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ.	2—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	6—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	12—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	24—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
வி. பி. மூலம் அனுப்ப இயலாது.
மானேஜர், "மாலை மணி"

நெற்பயிரில் எலிவெட்டு

திருநெல்வேலி, டிச. 30— இப்பகுதியில் மழை பெய்யாத காரணத்தால் தண்ணீர் தட்டு ஏற்பட்டு நெல் பயிர் செல்லாமல் வாடி வருகின்றன. இந்நிலையில் விளைந்துள்ள நெற்பயிரை எலிகள் வெட்டி சேதப்படுத்துவதாக விவசாயிகள் சொல்லுகிறார்கள்.

வானொலி

(4-1-50 புதன்கிழமை)

சென்னை

[211.3 மீட்டர்கள்]

காலை:

6 ... செய்திகள்
7-30 வி. ராகவன்—வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-50 விஜயராகவன்—பாட்டு

பிற்பகல்:

12-30 எம். கே. கிருஷ்ணன்—வயலின்
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1 40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்

மாலை:

4-00 சங்கரநாதன், டி. வி. சிதா—பாட்டு
5-30 அப்துல்கரீம்—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6 20 ஜானகி—பாட்டு

இரவு:

7 00 வி. சிதம்பரம்—பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7 30 என். லலிதா—பாட்டு
7-45 சி. ஆர். கணபதிபிள்ளை—பேச்சு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆ கிலப் பேச்சு
9 30 எம். என். சம்பந்தம்—புல்லாங்குழல்
10 00 ஒலிவல்லை (இசைத்தட்டு)
10-30 முடிவு

திருச்சி

[395.3 மீட்டர்கள்]

காலை:

7.15 தமிழில் செய்திகள்
7-30 ராமமூர்த்தி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8.15 என். அர்த்தமணி—பாட்டு
8.30 என். கேசி புல்லாங்குழல் இசைத்தட்டு

பிற்பகல்:

1-00 சதம்பம் (இ. த.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 என். அய்யாமணி—பாட்டு
2 00 தமிழில் செய்திகள்
2-10 எஸ். ஞானசம்பந்தம்-பாட்டு

மாலை:

5-00 குஞ்சுமணி வெங்கடராமன்—புல்லாங்குழல்
6.30 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 ரேடியோ வார்த்தைகள்
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-45 சென்னையில் உள்ளபடி
8 00 ராமமூர்த்தி—பாட்டு
8-30 குஞ்சுமணி வெங்கடராமன்—புல்லாங்குழல்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 லாவணிப் பாட்டுகள்
9-35 இசைவேலை (இசைத்தட்டு)
10-0 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.